தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2019 துலை (15-10-1988) ஓர் உருபா (இதழ் எண்: 111)

பொழிலன், முகிலன், இளங்கோ தவிர தமிழ்நாடு விடுதலைப் போராளிகள் அனைவரும் சொந்தப் பிணையலில் விடுவிக்கப் பெற்றனர்!

முதலிருவரும் சென்னை, சதாசிவம் உசாவல் குழுமுன் 12-10-88 அறிவனன்று ஆய்வுக்குக் கொண்டுவரப் பெற்றனர்!

கடுகை மலையாக்கப் பார்க்கிறது, அரசு! தனிநாட்டு உணர்வை ஒடுக்குவதற்குப் பல வழிகளிலும் பலரையும் அச்சுறுத்துகிறது!

தமிழ்நாடு தனியரசு ஆகாமல் தமிழினத்திற்கு விடிவே இல்லை என்பதைத் தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க

Scanned with CamScanner

ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

(அண்மையில் தளைப்படுத்தப்பட்ட, நம் மகன் **பொழிலனும்** அவர் நண்பர்கள் சிலரும் மதுரை, நடுவண் சிறையில் காவலில் வைக்கப் பெற்றுள்ளனர். அங்கிருந்து பொழிலன் நமக்கெழுதிய மடல்கள் சில, அவர்களின் உணர்வுத் தெறிப்புகள், கருத்துகள் இப்பொழுதுள்ள நிலையில் எவ்வாறு இருக்கின்றன என்பதை உணர்த்துகின்றன. அவற்றை நம் அன்பர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவை இங்கு வெளியிடப் பெறுகின்றன; காலத்தால் உணர வேண்டிய கருத்துகள் சில அவற்றில் உள்ளனவா என்பதைப் பாருங்கள். மடல்கள் அனைத்தும் சிறைபதிகாரிகளின் ஆய்வுக்குப் பின் நமக்கும் கிடைத்தவை. — ஆசிரியர்)

மடல்: 3 மதுரை நடுவண் சிறை
9-8-88.

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு,

வணக்கங்கள். தங்களின் அறிவழுத்த மடல் நேற்று இரவு, நாங்கள் கொடைக்கானல் சென்று திரும்பிய பின் கிடைத்தது. படித்து மிகவும் மகிழ்வுற்றோம். தங்களின் மடல் இரு நாள்களாக வரவில்லையே என எண்ணி எதிர்பார்த்திருந்த எனக்கு மிகவும் மகிழ்வாகவும், ஊக்கமாகவும் இருந்தது. கடந்த வெள்ளிக்கிழமை தான் எங்களுக்குத், **தென்மொழியும் தமிழ்ச்சிட்டும்** கொடுத்தார்கள். தென்மொழி சுு 24; ஓ 5, 6 — இரண்டுமே மிகவும் சிறப்பாக இருந்தன. ஆளுநருக்கு மடல் எழுதினோம். **தென்மொழித்** — தொடர்பான ஆசிரியவுரை மிகவும் உருக்கமாக அமைந்திருந்தது. தென்மொழி சுவடி 19 நடந்துகொண்டிருக்கையில், தாங்கள் தென்மொழியை நிறுத்துவதாக அறிவிப்புக் கொடுக்கையில், அதற்கென வருந்தி எத்தனை மடல்கள் குவிந்தன. ஆனால் தமிழன் தன் மேனி குலையாமல், எதுவும் ஊறு நேராமல், தென்மொழியைப் படித்துக் கொண்டு மட்டும் இருந்து விடலாம் என அக்கால் நினைத்துள்ளான் என்பது இப்பொழுது தான் விளங்குகிறது. இக்காலப் புதினங்கள் படிப்பதும், கிழமையிதழ்கள் படிப்பதும் போன்று தம் தமிழ் மொழி,இன உணர்வுக்கான ஒரு (புதினக்) கருத்து இதழாகவே அவர்கள் இதை எண்ணிப் படித்திருக்கிறார்கள் என்பது இப்பொழுதே விளங்குகிறது. அவ்விதழைப் படிப்பது கூட, தமக்கு, தம் குடும்பத்துக்குத் தம் வாழ்க்கைக்குத் தம் ஊதியத்துக்குத் தடையாக, ஊறு விளைவிப்பதாக இருக்கிறது என அறியும் பொழுது, அதையும் விட்டு விட்டுச் சோறு தின்னும் சோற்றுப் பிண்டங்களாய்ப் போகிற இந்நிலையை என்னவென்று உரைப்பது? கடந்த முப்பதாண்டுக் காலமாகத் தென்மொழி பயிலுநர் ஒவ்வொருவரும், மாதம் ஒருவரைத் தேர்வு செய்து, உணர்வூட்டி, உண்மையான இத்தமிழ் இன மக்களின் விடுதலைக்கான கண்ணோட்டத்தில் பணி செய்திருப்பார்களாயின், இத் தமிழகம் இன்றைக்கு ஒரு பெரும் புரட்சியைக் கண்டிருக்கும்.

தமிழ் இன மக்களின் விடுதலைக்காகக் கோடான கோடி உருவாக்கலைச் சேர்த்து விட்டுச் சென்றுள்ள பெரியாரின் அருந்தமிழின உணர்வுகளை, முழுமையாகத் தம் தந்நல உணர்வொடு கூடிய பொதுநலப் போர்வையில் மூழ்கிப் பணியாற்றிக் கொண்டிருக்கிற திராவிடர் கழகத் தலைமைகள், ஒரு சிறிதேனும் தமிழின விடுதலைக்கான திட்டம் இல்லாமல், விளம்பர வெறியர்களாக இளைஞர்களை என்றென்றும் ஏமாற்றிப் பேசித் தம் பின்னால் இழுத்துச் சென்று காயடிக்கும் நிலைகளை எண்ணி வருத்தமுறவே எங்களால் இன்றைக்கு முடிகிறது.

இந்தச் சூழலில் எப்படியாவது, மக்களைக் கூறு போட்டு அனைவரையும் தம் சார்பினராக ஆக்கிக் கொள்ள அரசு ஓயாமல் திட்டமிட்டுச் செயல்படுத்திக் கொண்டுள்ளது. இவ்வாண்டுக் கல்வித் திட்டத்தில் வேண்டுமென்றே 6—ஆம் வகுப்புத் தமிழ்ப் பாடப் பொத்தகத்தில் முத்துராமலிங்க (தேவ)ர் வரலாற்றை எடுப்பது போல் எடுத்து, அதன் மூலம் தேவர் சாதியினரின் எழுச்சியைக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வது போல் விரைவு விரைவாக அப்பாடத்தை மட்டும் தனியாக அச்சிட்டுத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆறும் வகுப்புத் தமிழ்ப் பொத்தகத்துடனும் இலவய இணைப்பாகக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் எடபடியும் தேவர் சாதியினரின் ஒப்போலைகளை முழுமையாகப் பெற வேண்டும் என்பதே அவர்கள் கோணம்.

மேலும் கடந்த காலங்களில் பிற்படுத்தப்பட்ட சாதியினரையும், மேல்சாதியினரையும் கொண்டு நசித்து வைக்கப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எனத் தாம்தாம ஏதோ உதவுவோர் போன்று, இந்தப பேராயக் கட்சியினர் தாழ்த்தப்பட்டோருக்கான மாநாடுகள் போடுவதும், இறக்கிற காலம் வரை கேட்பாரற்றுக் கிடந்த திரு. கக்கனுக்குச் சிலை வைப்பதுமான பணிகளும் ஆட்சி வெறியர்களின் நாடகம் என்பதை நம் மக்கள் உணர்தல் வேண்டும்.

இம்முறை வந்த இராசிவ் காந்தி வேண்டுமென்றே இட ஒதுக்கீட்டுப் பணியை மிகவும் கீழ்த்தரமாகப் பேசியதுடன், வன்னிய சாதியினரையும் தவறுதலாகப் பேசிச் சென்றுள்ளார். அவரின்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 1-9-88முதல் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் (N. S. A.-வின்) கீழ், மதுரைச் சிறையில் காவலில் வைக்கப் பெற்ற, தமிழ்நாடு விடுதலைப் போராளிகள் பொழிலன்,முகிலன்,இளங்கோ, சென்னைச் சிறையில் உள்ள அறிவழகன், ஆகிய நால்வர் தவிர, பிற விடுதலைப் போராளிகள் தென்னவன்கோ, ஈகவரசன், இளமுருகன், வீரமணி, இளமாறன், குணத்தொகையன், தெய்வமணி, குண்டலகேசி, பவணந்தி, தமிழ்இனியன், சுகுமாறன், கரிகாலன், ந. முத்துக்குமரன், மா. ஆறுமுகம், சீனி. செந்தேவன், ஈசுவரமூர்த்தி, வள்ளுவராசன், வியனரசு, பாண்டியன், நாராயணன் ஆகிய அனைவரும், தஞ்சை, கொடைக்கானல், சென்னை, சைதாப்பேட்டை, கோவை ஆகிய ஊர்களிலிருந்து, வழக்கு மன்ற நடுவர்களால் அவரவர் சொந்தப் பிணையல்களில் கடந்த மாதம் இடையிலிருந்து படிப்படியாக விடுவிக்கப் பெற்றுள்ளனர். அவர்கள், சென்னை, தஞ்சாவூர், கோவை, திருச்சி ஆகிய ஊர்களில் உள்ள குறிப்பிட்ட காவல் நிலையங்களில் நாள்தோறும் கையெழுத்திட்டு வருதல் வேண்டும் என்பதும், இது தொடர்பான வழக்குகள் நடைபெறுகையில், அவர்கள் அனைவரும் வழக்குமன்றத்திற்கு வரவேண்டும் என்பதும், நடுவர்கள் அவர்களுக்கிட்ட கட்டுப்பாடுகள் ஆகும்.

பொழிலன், முகிலன், இளங்கோ, அறிவழகன் ஆகிய நால்வரும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் வைக்கப் பெற்றுள்ளதால், அவர்களுக்கு முறையான உரிமை வழக்குகள் உயர் நெறி மன்றத்தில் தொடுக்கப் பெற்றிருந்தும், அவர்கள் பிணையலில் விடுவிடுக்கப் பெறவில்லை. தே. பா. கா. சட்டப்படி அவர்கள் நால்வரும் ஓராண்டு வரை கட்டாயம் காவலில் வைக்கப்பெற வேண்டியவர்களாகக் கருதப் படுகிறார்கள். இதற்கிடையில் நால்வரும் தங்கள் தங்கள் கோரிக்கைகளை, அஃதாவது தாங்கள், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப் பட வேண்டிய அளவுக்கு ஏதும் உயிர்ச்சேதமோ, நாட்டு இரண்டகக் குற்றமோ, அஞ்சத்தகுந்த கொடுமைச் செயல்களோ புரியவில்லை என்பதைக் கூறி, மாநிலத் தலைமைச் செயலர்க்கும், நடுவணரசு உள்துறைச் செயலர்க்கும் முறையீடுகள் அனுப்பி வைக்கலாம் என்னும் நெறிமுறைப்படி, மூவரும் அத்தகைய முறையீடுகளை அவ்வச் செயலர்களுக்கும் மாநில ஆளுநர்க்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

அஃதன்றித் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப் பட்டுள்ளவர்கள், அச்சட்டத்தின்படி, அவர்கள் அவ்வாறு வைக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள், அதற்கென்று அரசால் அமைக்கப் பெற்ற ஓர் ஆய்வுக் குழு முன், அவர்களின் குற்றச்சாட்டு நடவடிக்கைகளின் தொடர்பாக உசாவல் (விசாரணை) செய்யப் பட வேண்டும். இதன்படி இளங்கோ ஏற்கனவே சென்னை, நடுவர் சதாசிவம் ஆய்வுக் குழு முன் உசாவல் செய்யப்பட்டார். அவரின் குற்ற நடவடிக்கைகளும் ஆயப்பெற்றன. ஆனால் அக்குழு அவரை விடுவிக்கவில்லை.

அதேபோல்,பொழிலனும், முகிலனும்,அறிவழகனும் சென்னை, சதாசிவம் ஆய்வுக்குழு முன்னர் கடந்த 12-10-88 அன்று உசாவலுக்குக் கொண்டுவரப் பெற்றனர். அவர்கள் அவ்வாறு உசாவல் செய்யப் பெறுகையில் வழக்கறிஞராக இல்லாத அவரைச் சார்ந்த உறவினரோ, நண்பரோ ஒருவர் உடனிருக்கலாம் என்பதும் தே. பா. கா. சட்டத்தின் நடைமுறை நெறி.

அதுபோல், பொழிலன், சார்பாகப் புலவர் இறைக்குருவனார், மா. பூங்குன்றன் ஆகியோரும், முகிலன் சார்பாக மா. செ. தமிழ்மணியும் உசாவல் குழுமுன் வாய்மூலம் கொடுத்தனர். பொழிலனும், முகிலனும் அவர்கள் மேல் சாட்டப் பெற்றிருக்கும் குற்றச் சாட்டுகள் தொடர்பாக, ஏதோ கடமைக்கு என ஓர் இரு வினாக்கள் கேட்கப் பெற்று உசாவப் பெற்றனர். சட்டத்திற்காக ஒரு நாடக பாணியில் நடத்தப் பெற்ற இவ்வுசாவல் நடவடிக்கையில் இவர்களுக்கு யாதொரு பயனும் விளையப் போவதில்லை என்பதை, அக்குழுவினர் உசாவிய முறையிலிருந்தே கண்டு கொள்ளலாம். எவ்வாறேனும், கடுகை மலையாகக் காட்டித், தனிநாட்டு உணர்வும் முயற்சியுமே இங்குக் கால்கொள்ளா வண்ணம் ஒடுக்க அல்லது முடிந்தால் அழிக்கவுமே பார்க்கும் நடுவணரசின் இவ்வகை ஒவ்வொரு நடவடிக்கையும், வேடிக்கையாகவும், வியப்பாகவும், ஒரு மரபு முறைப்படியாகவுமே உள்ளதன்றி, எவ்வகைப் பொருளுடையதாகவும், நெறியுடையதாகவும், ஞாயமானதாகவும், உண்மையாகவும் இல்லை என்பதை அவ்வகை உசாவல் பற்றி நன்கு அறிந்தவரே உணர முடியும்.

எப்படியோ, நடுவணரசு தமிழினத்தின் மேல் தொடுத்த நேரடிப் போரின் முதல் கட்ட நடவடிக்கைகள் தமிழீழத்திலும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தமிழகத்தின் மேலும் தொடங்கி விட்டதற்கான அறிகுறியே, இன்றைய நடைமுறைகளாகும்.

மொத்தத்தில் தமிழ்நாடு தனியரசு ஆகாமல், தமிழினத்திற்கு விடிவே இல்லை என்பது பெரியார் காலத்திலேயே உறுதிப் படுத்தப்பட்ட உண்மையாகும். இதை இன்று அரசியலில் பல்வேறு திசைகளில் போய்க் கொண்டிருக்கும் தமிழினத் தலைவர்களும், பொதுமக்களாகிய தமிழர்களும் உணர்தல் வேண்டும்.

Scanned with CamScanner

தில்லி அரசுக்கொரு திறந்த மடல்.

(இம்மடல் தமிழகப் பொதுவுடைமைக் கட்சி (மா—இலெ) 'மக்கள் போர்' குழுவின் தமிழக தேசிய விடுதலை அமைப்பான த.ம.வி.க' —வின் மடல். அம்மடல் கடந்த மே திங்கள், 'வேட்கை' இதழில் வெளியான ஓர் அரசியல் மடலாகும்.

வேட்கை இதழானது கைப்படி இதழாகத் தனிச்சுற்று இதழாகப் பல்வேறு சிக்கல்களுக்கும் இடையில் விட்டு விட்டு வெளிவரும் ஒன்ருகும். அவ்வாறு அவ்விதழ் வெளி வருவதால் அம்மடல் போதிய அளவிற்கு மக்களைச் சென்று அடைய வில்லை. மேலும், பொதுமைக்குழுகாயம் காண த. பொ. க. வோடு போராடிவரும் சில புரட்சிக் குழுக்களும் த.பொ.க. தேசியத்தில் மூழ்குவதாகக் கூறி அம்மடலை வெளிப்படுத்த அணியமாக இல்லை. ஏனெனில் அவர்களின் கொள்கை அடிப்படையில் நம் கொள்கைகளுக்கு எதிர்மாருக உள்ளன. அவர்கள் தேசிய இனங்களுக்குள்ள தன் உறுதி (சுய நிர்ணய)உரிமையை ஏற்கிருர்கள்; அதே நேரத்தில் அவ்வுரிமைக்காகத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதை எதிர்க்கிருர்கள். அதே போல் தமிழினம், தமிழர் நலம் எனக் கூறி உலாவரும் சில முதலாளியக் குழுவினரும் நமது போராட்டத்தை விரும்பவில்லை.

இந்நிலையில் 'இனம்—மொழி—நாடு' எனும் அடிப்படையில் தமிழர் நலத்தையே, தமிழகத்தின் — தன்னுரிமை விடுதலையையே தன்னுயிர் மூச்சாகக் கொண்டு போராடி வரும் '**தமிழ்நிலம்**' இதழில் இம்மடலை வெளியிட்டுத் தமிழகப் போராட்டத்திற்கு ஓர் அனைத்துலகிய அரசியல் உள்ளடக்கம் உண்டு என்பதை வெளிப்படுத்த வேண்டும் என நாம் விரும்புகிருேம்.)

தமிழக மக்கள் விடுதலைக் கழகம்,
தலைமைச் செயலகம்.

மதிப்பிற்குரிய தலைமையமைச்சர் இராசீவ் அவர்களே:

தமிழகத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களாகிய — தமிழர்களாகிய - எம்மை வெகுவாகத் தாக்கும் செய்திகள், சிக்கல்கள் தொடர்பாக, நாங்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டியவர்களாக உள்ளோம். அச் சிக்கல்கள் பற்றி நாங்களும், எம் அரசியல் தலைவர்களும் பல எடுத்துக் கூறல்கள், வேண்டுகோள் மடல்கள், தொலை வரிச் செய்திகள் மூலமாகத் தங்களுக்குப் பலமுறை எடுத்துக் கூறி வந்துள்ளோம் தாங்கள் அவற்றைக் கருத்தில் கொள்ளாது தம் விருப்பப் போக்கிலேயே தொடர்ந்து செய்வது எம்மை "இந்திய ஒன்றியம்" தொடர்பாகவும், ஒரு முடிவைக் காண வேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. இது குறித்து நாங்கள் கவலையடைந்து வருகின்றோம்.

நாங்கள் இந்திய ஒன்றியத்தில் ஓர் உறுப்பான தேசிய — இன — மக்கள் ஆவோம். கடந்த 1947 முதலே இந்திய ஒன்றியத்துடன் இணைந்து வாழ்ந்து வருகிருேம். கடந்த காலங்களில் இந்திய ஒன்றியத்தில் மதிப்புடனும் பெருமிதத்துடனும் வாழ்ந்து வந்துள்ளோம். அக்காலங்களில் இந்திய ஒன்றிய நடுவண் அரசில் பொறுப்பேற்றிருந்த அரசியல் தலைவர்களும் எமக்குள்ள மதிப்பை அளித்து எம் கருத்துகளுக்கும் எடுத்துக் கூறல்களுக்கும் செவி சாய்த்து மதிப்பளித்தனர். ஆனல் தற்போது தங்களைத் தலைமையமைச்சராகக் கொண்டுள்ள நடுவண் அரசோ, எம் கருத்துகளுக்கும், எம்மோடு இந்திய ஒன்றியத்தில் இணைந்துள்ள பிற தேசிய — இன மக்களின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்காது கொடுங்கோன்மை (FASCIST) போக்கில் செயலாற்றி வருவது எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கிக் கொண்டு வருகின்றது.

தமிழர்களாகிய நாங்கள் இந்திய அரசியல் அமைப்பின் படியும், உலக நெறிமுறைகளின்படியேயும், ஒரு மதிப்பு மிக்க தேசிய இன மக்கள் ஆவோம். அவற்றின்படி உலகக் குடிநாயக (சன நாயக) உரிமைகளையும் உடைய ஒரு தேசிய மக்கள் ஆவோம். இவ்வகையில் குடி நாயக உரிமைகளைக் கொண்ட இந்திய ஒன்றியத்தில் இணைந்து வாழும் எமக்குக் கருத்துகளை எடுத்துக் கூறுவதற்கும், வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. அவ்வாறு வெளியிடுவதும், எடுத்துக் கூறுவதும் தேசியப் பகையோ அரசு இரண்டகமோ (துரோகமோ) ஆகா. அவ்வாறு நாங்கள் எடுத்துக்கூறும் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதும், ஏற்பதும் குடிநாயகத்திற்குரிய பண்புகளாகும். ஆனல் தங்களின் நடுவண் அரசோ நாங்களும், எம்மோடு இணைந்து வாழும் பிற தேசிய இன மக்களும் எடுத்துக் கூறுவனவற்றைப் புறந்தள்ளியும் அவற்றை இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமைக்கு எதிரானது எனக் கூறியும் வருகின்றது. இது தங்களின் நடுவண் அரசிலுள்ள குடிநாயக வறட்சியையே எமக்கு எடுத்துக்காட்டுகிறது. மேலும் இப்போக்கு குடிநாயகப் பண்புகளுக்குக் குழி தோண்டிப் புதை மேடை அமைப்பதாகவும், தாங்கள் கொடுங்கோலாட்சி புரிந்து கொண்டிருப்பதையுமே எமக்குப் புலப்படுத்துகிறது. இது எமக்குப் பேரதிர்ச்சியையும் பெருந்துன்பத்தையுமே தந்து கொண்டுள்ளது.

இவ்வாறு தாங்கள் செல்வதானது, இந்திய ஒன்றியம் தனது குடிநாயகத் தன்மையில் இருந்து

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

இராசீவ் பற்றி மக்கள் கருத்து!

திருவாளர் அழுக்கு மூட்டை!

இராசீவ் அரசியலில் நுழைந்தபோது, மக்களால் 'திருவாளர் தூய்மை' என்று மதிப்பிடப்பட்டார். ஆனால், இன்றோ, அவர் 'திருவாளர் அழுக்கு மூட்டை'யாக மாறி இரக்கத்திற்குரியவராகக் காட்சியளிக்கிறார். இராசீவ் பெரிய அரசியல் குடும்பத்திலிருந்து வந்தவராக இருக்கலாம். ஆனால் அவருக்கு அரசியலின் தெளிவு சுழிவுகள் முறையாகக் கற்பிக்கப் படவில்லை - என்பதோடு, அவரும் அதைக் கற்றுக் கொள்வதிலும் நாட்டம் செலுத்தவில்லை. அவருடைய கருத்தாளர்களும் அவருக்குத் தவறான வழிகளைக் காட்டியே செல்கிறார்கள். அவர் படிப்படியாக அனைத்ததிகாரியாக வளர்ச்சியடைந்து, இன்று பாசிசத்தை நோக்கிப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்.

— *சி. கதிரேசன், சிறுமுகை.*

அழிவுக் காலத்தில் இழிவுமதி!

அழிவுக் காலத்தில் இழிவு மதி' (விநாச காலே விபரீத புத்தி!) — 1975 சூலையில் நாட்டில் நெருக்கடி நிலை நடைமுறைப் படுத்தப்பட்டுத் தம்மைச் சிறை செய்யவந்த காவல் துறையினரிடம் இந்திரா காந்தியின் தன்னதிகாரப் போக்குக் குறித்து, செயப்பிரகாசு கூறிய பழமொழி இது. இதனைத் தற்போது தலைமையமைச்சர் இராசீவின் மேலான பார்வைக்குப் படைக்கிறேன்.

— *செ. சி. பிரகாசு, சென்னை-62.*

இராசீவின் செருக்கு ...!

காலஞ்சென்ற தலைமையமைச்சர் (இந்திரா காந்தியின்) இறுதிச் சடங்குகளை அவருடைய அமைச்சரவையே செய்திருக்க வேண்டும். அதுதான் குடிநாயக நடைமுறை. அந்தநடை முறையை மீறி இராசீவ் உடனடியாகப் பதவியேற்று இந்திரா அமைச்சாவையைக் கலையச் செய்தது முற்றிலும் தவறாகும். நேருவுக்குக் கூடக் கிடைக்காத பெரும்பான்மை இராசீவுக்குக் கிடைத்ததும் இராசீவ் செருக்கு கொண்டு விட்டார். அந்தச் செருக்கே அவர் ஆட்சியில் ஏற்படும் தவறுகள் அனைத்திற்கும் அடிப்படை. இராசீவ் செய்து கொண்ட அசாம் ஒப்பந்தம் தவறானதாகும் ... 'அவதூறு தடைச் சட்டம்' இராசீவின் பொறுமையின்மைக்கு எடுத்துக் காட்டாகும்.

— *வெ. பாலன், சென்னை 5.*

குடியரசு அமைப்புக்கு மாறான பதவியமர்த்தம்!

குடியரசு அமைப்பிற்கு மாறாக, வழிமுறை (வாரிசு) அடிப்படையில் தலைமையமைச்சராகத் தேர்ந்து எடுக்கப்பட ஒருவர், பின் எப்படிக் குடியரசு முறைப்படி செயல்படுவார்? ... இரும்புத்திரை நாடான உருசியாவில் கூடச் செய்தித்தாள் உரிமை கிடைக்கும் பொழுது உலகின் மிகப் பெரும் குடியரசு நாடான இங்கு, தாள் சமநிலை பேசும் பேராய ஆட்சி, அவதூறு சட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்து நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டுள்ளது. செய்தித்தாள் உரிமை பறிக்கப் பட்டால், நாட்டில் ஊழல் சட்ட முழுமையான, ஒன்றாகி விடும்.

— *டி சரவண, மதுரை. 2.*

('தினமணி' 18-9-89 இதழில் 'வாசகர் கருத்துகள்' பகுதியில் வந்த கடிதங்களில் சில) 0

போர்வாள்!

பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு.

போர்வாளை உறையிலிட்டுப் பகைப் புலத்தைப்
புறங்காண வைப்பதெங்ஙன்? புகல்வீர்
[அய்யா!
கூர்பிடிக்க வேண்டுமெனில் உலைக்களத்தில்
கொல்லர்கள் தம்மிடத்தில் ஒப்படைத்தால்
சீர்செய்து கொடுப்பாரே அதைவிடுத்துச்
சிந்தைமிக நொந்ததைக்கை நழுவவிட்டால்
வேர்த்திருக்கும் பகைவருக்கு விருந்தாவோம்
[நாம்!
வேண்டாம் இக்கருத்தையுடன் விட்டொழிப்பீர்.

கேடயமாய்த் தமிழினத்தைப் பாதுகாத்துக்
கீழ்மையராம் பகைவர்க்குக் கிலியுண்டாக்கி
நாடகமா டிகள்முகத்தி ரைகி ழித்து
நயவஞ்ச நரிகளினை விரட்டி வைத்துப்
பூடறுத்துப் பகைப்புலத்தைப் பொலிவு கூட்டும்
பொற்கதிரின் வரவான தென்மொழிச்சீர்
வாடவிட மாட்டார்கள் தமிழமாந்தர்
வாரிநனி பொருளீந்து வலிமைசேர்ப்பர்.

பெற்றெடுத்த தாயேதன் பிள்ளை யைத்தான்
பேணவழி யில்லையென்று கொல்லுவாளா?
உற்றதுன்பம் மலையளவே யானபோதும்
உளம்ஒப்பி இக்கொடுமை தனைச்செய்வாளா?
எற்றைக்கும் இவ்வெண்ணம் உமக்கு வேண்டாம்;
ஈடில்லா நும்தொண்டு தொடரவேண்டும்!
கொற்றத்தை மீட்கின்ற உரிமைப் போரில்
கொள்கையுரம் பாய்ந்தவர்கள் குலையலாமா?

தாய்க்கேஓர் துன்பமென்றால் துடி - துடித்துத்
தாம்அந்தத் துன்பத்தை நீக்கிடாரா
சேய்களுமே? சிறுதுரும்பும் படாதவாறு
சேர்த்தணைத்து வளர்த்தவளைக் கைவிடாமல்
தோய்ந்தன்பில் சூழ்ந்துமிகப் பாதுகாப்பர்;
தூங்காது கண்மலர்ந்து காத்த தாயை
சாய்ந்துதலை கவிழாதே தமிழே! தாயே!
தக்கதுணை யாயிருப்பர் தளரவேண்டாம்.

"இந்தி"யரும் இந்தித் திணிப்பும்

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

வடஇந்திய ("இந்தி"க்கார) மாணவர் ஒருவருக்கும், தமிழ்நாட்டு மாணவருக்கும் நடந்த ஆங்கில உரையாடலொன்றின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது. (இ'து உண்மையிலேயே நடந்த உரையாடல். கற்பனையன்று.) இவ்வுரையாடல் "இந்தி"யர் தமிழைப் பற்றியும், தமிழரின் மொழியுணர்வைப் பற்றியும், தமிழரின் இன உணர்வைப் பற்றியும், தமிழரின் இந்தியெதிர்ப்பைப் பற்றியும் என்ன நினைக்கிறார்களென்பதைத் தெள்ளென விளக்கும்.

இந்திக்கார மாணவர் — நீங்கள் ஏன் ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடர வேண்டுமெனப் போராடுகிறீர்கள்?

தமிழ்நாட்டு மாணவர் — தவறு. நாங்கள் மாநில மொழிகள் மாநில அளவில் ஆட்சி மொழிகளாக வேண்டுமென்றும், மாநிலங்களுக்கிடையே தொடர்பு மொழியாகவும், இந்திய நடுவணரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்பு மொழியாகவும், இந்திய நடுவணரசின் ஆட்சி மொழியாகவும் மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்தப் படவேண்டுமெனவும் போராடுகிறோம்.

இந்திக்கார மாணவர் — வேற்று நாட்டு மொழியான ஆங்கிலத்தை நம்மிடையே தொடர்பு மொழியாக வைக்க வேண்டுமென்று சொல்கிறீர்களே? அ'து உங்களுக்கு வெட்கமாயில்லையா? நம் நாட்டு மொழிதான் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப் பட வேண்டும்.

தமிழ்நாட்டு மாணவர் — பதினைன்குக்கு மேற்பட்ட மொழிகள் நம்மிடையே இருக்கின்றனவே. அவையனைத்தையும் தொடர்பு மொழியாகப் பயன்படுத்துவதென்பது இயலாததொன்று. அதனால் - தான் ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டுமென்கிறோம். ஆங்கிலம் உலக மொழி. அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளின் உயர்நிலைப் படிப்புகளுக்கும், பன்னாட்டு வணிகத் தொடர்புக்கும் ஆங்கிலம் தேவைப்படுகிறது. ஆங்கிலம் இந்தியா முழுவதும் கட்டாயப் பாடமாக இருக்கிறது. இருக்க வேண்டுமென இந்திய நடுவண்ணரசும், எல்லா மாநில அரசுகளும் கூறுகின்றன. இந்நிலையில் ஆங்கிலமே தொடர்பு மொழியாகவும், இந்திய நடுவணரசின் ஆட்சி மொழியாகவும் இருக்கவல்லது. இதுவே எல்லா மாநிலமக்களுக்கும் நயன்மையானது.

இந்திக்கார மாணவர் — மீண்டும் சொல்கிறேன், ஆங்கிலம் அயன்மொழி. அதனைத் தொடர்பு மொழியாக்க வேண்டுமென்கிறீர்களே? உங்களுக்குக் கொஞ்சமேனும் தன்மானமில்லையா?

தமிழ்நாட்டு மாணவர் — எங்களைப் பொறுத்த வரையில் ஆங்கிலமும் அயல்மொழி. இந்தியும் அயல்மொழி. ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகக் கொள்வது உங்களுக்கு மானக் குறைவாக இருக்குமானால், இந்தியைத் தொடர்பு மொழியாகக் கொள்வது எங்களுக்கு மட்டும் மானக் குறைவாக இருக்காதா?

இந்திக்கார மாணவர் — இந்தி நம்நாட்டு மொழி. அதுதான் ஆட்சி மொழியாக இருக்க முடியும்.

தமிழ்நாட்டு மாணவர் — தவறு. இந்தி தமிழ்நாட்டின் மொழியன்று; அ'து உத்தரப் பிரதேசத்தின் மொழி. மத்தியப் பிரதேசத்தின் மொழி.

இந்திக்கார மாணவர் — இந்தியா நமது நாடு. இந்தி இந்திய மொழி. அதுதான் ஆட்சி மொழியாக இருக்க முடியும்.

தமிழ்நாட்டு மாணவர் — இந்தியா முழுவதையும் உங்கள் நாடு என்று ஏற்றுக் கொள்வீர்களென்றால், தமிழும் ஓர் இந்திய மொழிதானே. இந்தியாவின் மொழிதான் தொடர்பு மொழியாக வேண்டுமென்று உண்மையிலேயே கருதுவீர்களேயானால், தமிழைத் தொடர்பு மொழியாக ஏற்றுக் கொள்ளுங்களேன். உங்கள் கருத்துப்படி, உங்கள் தன்மானமும் பறிபோகாது. எங்கள் தன்மானமும் பறி போகாது.

இந்திக்கார மாணவர் — ஒரே ஒரு தெற்கு மாநிலத்தில் பேசப்படும் தமிழ்மொழி எப்படி இந்தியாவின் ஆட்சி மொழியாக முடியும்? அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழ்நாட்டு மாணவர் — தமிழ் இந்தியாவின் தொடர்பு மொழியாக வேண்டுமென்று நாங்கள் எப்போதுமே கேட்டதில்லை. பன்னாட்டு வணிகத்திற்கும், மேநிலை அறிவியல், பொறியியல், மருத்துவப் படிப்புகளுக்கும் தேவையானதும், இந்தியா முழுவதும் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப் படுவதுமான ஆங்கிலமொழி இந்தியாவின் தொடர்பு மொழியாகத் தொடர வேண்டுமென்றும், மாநில அளவில் மொழிகள் ஆட்சி மொழிகளாக வேண்டுமென்றும் நாங்கள் கோருகிறோம். நீங்களோ, கட்டாயப் பாடமாக ஆங்கிலத்தைப் படித்தாலும், ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருப்பது உங்கள் தன்மானத்திற்கு இழுக்கு என்று கூறினீர்கள். அயல் நாட்டு மொழியான ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகக் கொள்வது இழுக்கென்றால், உங்கள் கருத்துப் படி இந்தியாவின் ஒரு மாநிலமான தமிழ்

மொழியைத் தொடர்புமொழியாக ஏற்றுக் கொள்வீர்களா என்று கேட்டேன். நீங்களோ, தமிழ் ஒரே ஒரு தெற்கு மாநிலத்தின் மொழி என்று ஏளனம் செய்கிறீர்கள். நீங்கள் தெற்கு மாநிலத்தின் மொழியைத் தொடர்பு மொழியென்று ஏற்றுக் கொள்வது இழுக்கு என்று கருதினால், நாங்கள் மட்டும் ஏன் இரண்டு வடக்கு மாநிலங்களில் பேசப்படும் இந்தியை எங்கள் தலைமேல் தாங்கிக் கொள்ள வேண்டும்? எப்படியாவது, உங்கள் தாய்மொழியான இந்தியை இந்தியா முழுவதும் பொது மொழியாக்கி விட வேண்டுமென்றும், அதனால் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட உங்களெல்லாருக்கும் பொருளியல் நிலையில் ஏற்படும் பயன்களைத் துய்க்க வேண்டுமென்றும் கருதியே இந்தத் தந்நலப் பேச்சுப் பேசுகிறீர்கள். இந்தி ஆட்சி மொழி என்று கூறிக் கொண்டு தமிழரின் வரிப்பணத்தைக் கோடிக் கணக்கில் வடக்கே கொண்டு போய், இந்தியில் அறிவியல் நூல்களும், பொறியியல் நூல்களும், மருத்துவ நூல்களும் எழுதுவதற்கும் பயன்படுத்துகிறீர்கள். அந்த வரிப்பணத்தை இந்திக்குத் திறையாகச் செலுத்தா விட்டால், அந்தப் பணத்தைத் தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் கட்டவும், வேளாண்மையைப் பெருக்கவும் செலவிட்டுத் தமிழரின் வாழ்க்கை வசதிகளை ஏராளவேனும் பெருக்கலாம். அதுமட்டுமா, பலகோடிக் கணக்கான தமிழரின் வரிப்பணங்களைத் தில்லியரசு வடக்கே கொண்டுபோய், உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் தொழிற்சாலைகள் கட்டி உங்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொள்கிறீர்கள். அந்த வரிப்பணங்களைத் தில்லிக்குத் திறையாக அனுப்பாமலிருந்தால், எங்கள் தமிழ் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டங்கள் குறையும்; வேளாண்மைக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளும் பெருகும். உத்தரப் பிரதேசத்தையும், மத்தியப் பிரதேசத்தையும் சேர்ந்த நீங்கள் இந்தியை மட்டும் எங்கள் மீது திணிக்கவில்லை; எங்கள் வரிப் பணங்களையும் வாரிக் கொண்டு போகிறீர்கள்.

இந்திக்கார மாணவர் — எந்தெந்த வரிப்பணங்கள் மாநிலங்களிலிருந்து நடுவண்ணரசுக்குச் செல்ல வேண்டு மென்பதை அரசியல் சட்டம் கூறுகிறது. எந்தெந்த மாநிலங்கள் நடுவண்ணரசிடமிருந்து பண உதவி பெற வேண்டுமென்பதையும் நடுவணரசு தீர்மானிக்கிறது.

தமிழ்நாட்டு மாணவர் — இந்திய அரசியல் சட்டமென்ன மாற்றமுடியாததா? எத்தனையோ முறை திருத்தப் பட்டுள்ளது. மாநிலங்களிலிருந்து தில்லிக்கு வந்து குவியும் வரிப்பணங்களை நடுவணரசு கோடிக் கோடியாக இந்தி பேசும் உத்தரப்பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் தொழிற்சாலைகள் கட்டவும், அரசினர் மருத்துவ மனைகள் கட்டவும், போக்குவரத்துச் சாலைகள் போடவும் பயன்படுத்துகிறார்கள், இங்கே நாங்களோ புதிய தொழிற்சாலைகள் கட்டப் படாத காரணத்தால் வேலைவாய்ப்புகளற்று வறுமைப் படுகிறோம். புதிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப் படாத காரணத்தால் பயிர் விளைச்சல் குறைந்து பட்டினி கிடக்கிறோம். பணமில்லாமையால் எங்கள் சாலைகளெல்லாம் குண்டும் குழியுமாகக் கிடக்கின்றன. புதிய அரசினர் மருத்துவமனைகள் கட்டப்படாமையால், எங்கள் ஏழைமக்கள் நோய் வாய்ப்பட்டால் என்ன செய்வதெனத் தெரியாமல் விழிக்கிறார்கள்.

இந்திக்கார மாணவர் — எத்தனையோ பாடுபட்டு விடுதலை வாங்கினோம். உங்களைப் போன்றவர்களுக்குக் கொஞ்சமும் நாட்டுப்பற்று கிடையாது.

தமிழ்நாட்டு மாணவர் — ஏதோ, நீங்கள்தாம் பாடுபட்டு விடுதலை வாங்கியது போலவும், அதனால் இந்தியா முழுவதும் உங்களது பரம்பரைச் சொத்து போலவும் நடந்து கொள்கிறீர்கள். விடுதலைக்காகப் போராடிய சிதம்பரனார், வாஞ்சி நாதன் திரு.வி.க., புலித்தேவன், மருது பாண்டியர், கட்டபொம்மன் போன்றவர்களைப்பற்றி வடநாட்டில் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். நாங்கள் செய்த ஈகம் வடநாட்டாரின் ஈகத்திற்கு எந்த வகையிலும் குறைவு பட்டதன்று. ஆங்கிலேயன் வெளியேறியதும், நீங்கள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு எங்களை அடிமைகள் போல நடத்துகிறீர்கள். ஆங்கிலேயன் தனது வசதிக்காக ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக வைத்துக் கொண்டான், நீங்கள் உங்கள் வசதிக்காக இந்தியை ஆட்சி மொழியாகத் திணிக்கிறீர்கள். ஆங்கிலேயன் இந்தியா முழுவதையும் சுரண்டி, இந்தியரின் உழைப்பையும் இயற்கை வளங்களையும் தன் வாழ்க்கை வசதிகளுக்காகப் பயன் படுத்திக் கொண்டான். நீங்களோ, தமிழ்நாடு முதலிய மாநிலங்களைச் சுரண்டி, எங்களது உழைப்பையும் இயற்கை வளங்களையும் உத்தரப்பிரதேச, மத்தியப் பிரதேச மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்துகிறீர்கள். எங்களைப் பொறுத்தவரையில் ஆங்கிலேய ஆட்சி போய் இந்தி ஆட்சி வந்துள்ளது என்றே படுகிறது. நாங்கள் அடிமைகளாக நடத்தப் படுவது போலவே உணர்கிறோம். 0

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

சிறையில் உள்ளவர்களை வெளியில் கொணரவும், வழக்கு நடத்தவும் பொருளுதவி செய்யுங்கள். --ஆசிரியர், தமிழ்நிலம்.

தொடர்: 5

இதழ் 110-இன் தொடர்ச்சி.

தமிழகத்தில் புதிய குடியரசுப் புரட்சி!

புதுக்குடியமர்த்தச் சுரண்டல் முறையின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட பசுமைப் புரட்சித் திட்டம் உழவு உருவாக்கத்தை முதலாளிமயமாக்கக் கொண்டு வந்த முறையாகும். பசுமைப் புரட்சித் திட்டம் உழவு உருவாக்க உறவில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்து இருந்தாலும், உழவு உருவாக்க ஆற்றல்களின் வளர்ச்சியில் சிறு மாற்றத்தைத்தான் ஏற்படுத்தி உள்ளது. உரம், இயந்திரம் போன்ற உழவு உருவாக்க ஈடுபொருட்களின் விலையை அடிக்கடி உயர்த்தி உழவர்களை கடுமையாகச் சுரண்டுகின்றது. மக்களின் தேவைக்கான, விளைவை அனைத்து நாட்டுச் சந்தைக்கான உருவாக்கத்தை மாற்றி விளைவு, விற்பனை, விலை போன்றவற்றைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, உழவர்களைச் சுரண்டிக் கொள்ளை அடித்துச் செல்கின்றது. அரசு மற்றும் கூட்டுறவுக் கழகங்களின் ஈவு இரக்கமற்ற வட்டிச் சுரண்டலால் உழவர்கள் தங்கள் முந்தைய சொத்தை இழந்து கடனாளியாகி, ஓட்டாண்டியாகியுள்ளனர். இதன் அடிப்படையில் எழுந்ததுதான் தமிழக உழவர்கள் சங்கம். அது தமிழக வரலாற்றிலே மாபெரும் வீரமிக்க போராட்டம் நடத்தி இந்தியா — தமிழக ஆளும் பிரிவினத்தை ஆட்டம் காண வைத்தது. நிலக் கிழமை உழவு முதலாளிப் பிரிவினம் இவ்வுழவர்கள் சங்கத்தின் தலைமையைக் கைப்பற்றி அரசோடு கைகோத்துக் கொண்டு உழவர்கள் சங்கத்தை உடைத்து உழவர்களின் விடுதலைக்கான போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்தது.

அரசால் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருந்தாலும், இச்சட்டங்கள் உழவர்களின் போராட்டத்தின் விளைவாகக் கொண்டு வந்ததன்று. அதனால் இச்சட்டங்கள் பொதுவாகச் சிற்றூர்ப்புறங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தாலும் பழைய நிலக்கிழமை உருவாக்க முறையை முழுமையாக உடைத்தெறிய முடியவில்லை. இன்றும் சிற்றூர்ப் புறங்களில் அதன் மிச்ச சொச்சங்கள் வலுவாகவே உள்ளன. நிலச் சீர்திருத்தச் சட்டங்களாலும் பசுமைப் புரட்சித் திட்டத்தாலும் சிற்றூர்ப் புறங்களில் புதிய இனப்பிரிவுகள் தோன்றியுள்ளன. குறிப்பாக, உழவு முதலாளிகள், பணக்கார உழவர்கள், நடுத்தட்டு உழவர்கள், வறிய உழவர்கள், உழவுக் கூலித் தொழிலாளர்கள் போன்ற இனப்பிரிவினைப் பாகுபாடுகள் தெட்டத் தெளிவாக உருவாகியுள்ளன.

வல்லரசு நாடுகளினதும், அதிகாரப் பிரிவுத் தரகு முதலாளிகளினதும் சுரண்டலுக்குத் துணையாக இருக்கும் நடுவண் அரசின் ஆளுமையிலிருந்து விடுபட்டுத் தங்களின் தேசிய தனித்தன்மையைப் பாதுக்காக்கப் புதியகுடிநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. தமிழகத்தில் முதலாளியக் குடிநாயகப் புரட்சியின் கடமைகளைக் கூட இப்புரட்சி நிறைவு செய்யும். இந்தப் புதிய குடிநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்றத் தமிழக தொழிலாளிப் பிரிவு தலைமையேற்க முன் வரவேண்டிய முதன்மை பங்காகிறது.

வல்லரசு நாடுகளின் அதிகாரப் பிரிவுத் தரகு முதலாளிகளின் நடுவண் அரசின் சுரண்டல் மற்றும் வல்லாளுமைக்கு உள்ளாக்கப்பட்டு, வறிய மற்றும் நடுத்தட்டு உழவர்களும் உழவுத் தொழிலாளர்களும் இப்புரட்சியில் தொழிலாளிப் பிரிவினத்துடன் இணைந்து நின்று புதிய குடிநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். சிற்றூர்களில், பல்வேறு சிறு தொழில்களில் ஈடுபட்டு இருக்கும் தொழிலாளர்கள் இப்புரட்சியில் நம்பகமான கூட்டாளியாக இருப்பார்கள். வல்லரசுகளின் மற்றும் ஆளும் பிரிவினத்தின் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்ட உழவு முதலாளிகளின் ஒரு சிறு பகுதியும் பணக்கார உழவர்களில் ஒரு பகுதியும் புரட்சியின் ஒரு கால கட்டத்தில் கூட்டாளியாக வரலாம். சிற்றூர்ப்புறத்தில் மிக மிகச் சிறுபான்மையாக இருக்கும் உழவு முதலாளிகள் எஞ்சி நிற்கும் அரை நிலக்கிழமை ஆற்றல்கள் பெரும்பான்மைச் சிற்றூர்ப்புற மக்களை வல்லரசு நாடுகள் சுரண்ட அடிப்படையாக இருப்பவர்கள். வல்லரசு நாடுகளின் உருவாக்க முறையையும், பாதுகாத்து வறிய மற்றும் நடுத்தட்டு உழவர்களையும் உழவுத் தொழிலாளிகளையும் கசக்கிப் பிழிந்து சுரண்டும் உழவு முதலாளிகள் அரை நிலக் கிழமை ஆற்றல்கள் சிற்றூர்ப்புற மக்களின், உழவர்களின் முதன்மை எதிரியாவார்கள்.

புதுக் குடியமர்த்தப் பொருளியல் உருவாக்க முறை, சாதிய அரைநிலக் கிழமை உருவாக்க முறைகளையும், உறவுகளையும் முற்றிலுமாக ஒழித்து விடவில்லை. தமிழகத்தின் பெரும் பகுதியில் வலுவிழந்து போய் இருந்தாலும் சில பகுதிகளில் இன்றும் வலுவாகவே உள்ளது. இனப்பிரிவுப் போராட்டம் வல்லரசு எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்ட வடிவத்தைப் பெற்று இருக்கும் இன்றைய கால கட்டத்தில், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை வல்லரசுகளுக்கும், நடுவண் அரசுக்கும் எதிராக நடத்துகின்ற அதே வேலையில் சாதிய அரை நிலக் கிழமைக்கு எதிரான போராட்டங்களை அப்பகுதியில் இருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப வளர்த்தெடுக்கப் படுவதுடன், அவை தமிழக விடுதலைக்கான வல்லரசு எதிர்ப்புப் போராட்டங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

(தொடரும்.)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறழ்ந்து, கொடுங்கோன்மைத் தன்மைக்கு மாறி வருவதையே வெளிக்காட்டுகிறது. மேலும் இந்திய ஒன்றிய அமைப்பில் மாநிலங்களாக உள்ள எம்மீதும், எம்முடன் இணைந்து வாழும் பிற இன மக்கள் மீதும், நடுவண் அரசாக உள்ள தில்லியரசு தன் கொடிய கைகளைப் பதிப்பதாகவே அமைந்து வருகிறது. இவ்வாறு இந்திய ஒன்றியத்தின் தன்மை மாறிக்கொண்டு வருவது இந்திய ஒன்றியத்தில் இணைந்து வாழும் எமக்குத் துயரத்தையும் அதிர்ச்சியையும் அளித்து வருகின்றது.

தமிழர்களாகிய நாங்கள் இத்தகைய போக்கு உடனே தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என விரும்புகின்றோம். அவ்வாறு தடுத்து நிறுத்துவது மட்டுமே இந்தியாவின் ஒற்றுமையை வலிவுபடுத்துவதாகவும், இந்திய ஒன்றியத்தில் இணைந்து வாழ விரும்பும் தேசிய இன மக்களும் தத்தமது உரிமைகளோடும், குடிநாயகப் பண்புகளோடும் வாழ வழி வகுக்கும் என்பதையும் இங்கே வலியுறுத்த விரும்புகின்றோம்.

தாங்கள் இந்திய ஒன்றியத்தின் நடுவண் அரசிற்குத் தலைமையேற்ற காலந் தொட்டு, இந்திய ஒன்றியத்தின் பாதுகாப்புக்கு ஏதம் (அபாயம்) ஏற்பட்டுக் கொண்டே வருகின்றது. அதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இந்தியப் பாதுகாப்புக்கு பேரேதம் தருபவையாகவே அமைந்து வருகின்றன. குறிப்பாகத் தமிழீழத் தமிழர் இனச் சிக்கல் தொடர்பாகத் தாங்கள் கையாண்டு வரும் படை நடவடிக்கைகள் இந்தியாவின் பாதுகாப்புக்கும், இந்திய ஒன்றியத்தின் தென்பகுதியில் வாழ்ந்துவரும் எமது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விளைவிப்பனவாகவே நடந்தேறிவருகின்றன அவற்றால் நாங்கள் இந்தியாவின் பாதுகாப்புக் குறித்துப் பெருங்கவலை கொண்டவர்களாக உள்ளோம். மேலும் இந் நடவடிக்கைகள் தங்கள் தனியொருவரின் தனிமதிப்பிற்காகவே நடந்தேறி வருகின்றன. இது எமக்குப் பேரதிர்ச்சியைத் தருவதாகவே இருந்து வருகின்றது.

இந்தியப் படைகள் தற்போது தமிழீழத் தமிழர் இனச் சிக்கல் தொடர்பாக இலங்கை சென்று செய்து வரும் தமிழின அழிப்பு வேலைகளும், அட்டூழியங்களும், நடவடிக்கைகளும் மெல்ல மெல்ல இலங்கையை இந்தியாவின் எதிர்ப்பு நாடாகவே மாற்றி வருகின்றன. இவ்வாறு இலங்கை இந்தியாவின் எதிர்ப்பு நாடாக மாறுவதானது இந்தியாவின் பாதுகாப்புக்கும், இந்திய ஒன்றியத்தின் தென்பகுதியின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகவே அமைந்து வருகின்றது. எனவே இலங்கையில் இந்தியப்படைகள் செய்து வரும் தமிழின அழிப்பு வேலைகளும், அட்டூழியங்களும் உடனடியாக நிறுத்தப்படுவதன் மூலமே இந்தியாவின் பாதுகாப்பு வலுப்பெறும் என்று நாங்கள் கருதுகின்றோம். ஏனெனில் இலங்கை இந்தியாவின் எதிர்ப்பு நாடாக மாறுவதானது இந்திய ஒன்றியத்தின் தென்பகுதியில் வாழ்கின்ற தமிழர்களாகிய எமக்குப் பெரும் ஏதத்தினையே உருவாக்கும். இதனால் இந்தியாவின் பாதுகாப்பானது தென்பகுதியில் நிலை குலையும்; இதில் தங்களுக்கும் எவ்வகை ஐயமும் இருக்கவியலாது. இதுகுறித்து நாங்கள் மிகுந்த கவலையும் அதிர்ச்சியும் கொண்டவர்களாகவே இருக்கின்றோம்.

மேலும் தமிழீழ தமிழர் இனச் சிக்கல் தொடர்பாகத் தாங்கள் முன் வைத்துள்ள தீர்வையும் தமிழகத் தமிழர்களாகிய எம்மால் ஏற்றுக் கொள்ள இயலாது. உலக அரங்கில் தமிழீழ மக்கள் ஒரு தனித்தன்மையுடைய, குடிநாயக உரிமைகளையுடைய தனித்தேசிய இன மக்கள் ஆவார்கள். தமிழீழ மண்ணில் அத்தமிழர்களுக்கு என நீண்ட வரலாறும், ஆழமான பண்பாடும், தனித்தன்மை மிக்க வாழ்க்கை முறைகளும் உண்டு. அத்தமிழர்கள் அவற்றைப் படிப்படியாகச் சிங்கள இனவெறி அரசின் கொடுமைகளுக்காளாகிப் பறி கொடுத்த பின்னரே, இழந்து போன வாழ்க்கை, பண்பாடு, வரலாறு ஆகியவற்றை மீளப் பெறுவதற்காகவும், அவற்றைத் தற்காத்துப் பேணிக் கொள்ளக் கூடிய முழுமையான அரசியல் அதிகாரத்துக்காகவுமே போராடி வருகிறார்கள். அவர்களுடைய போராட்டம் நேர்மையானது; ஞாயமானது. அவர்கள் தங்களுடைய குடிநாயக உரிமைகளுக்காகத், தமது அரசியல் நெறியைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் தன்னுறுதிப் பாட்டு உரிமைக்காகவுமே போராடுகிறார்கள். அதற்காகவே கருவிகள் ஏந்தியும் போராடுகிறார்கள். அவர்களைத் தற்போது இந்தியா ஒடுக்கி அழித்து வருவதானது எமக்குத் துன்பத்தையே அளித்து வருகின்றது.

இலங்கைத் தீவில் அமைதி நிலவ வேண்டும் என்பதையே தமிழீழத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். ஆயினும் காலம் காலமாகத் தமிழர்களை அழித்து வந்த சிங்கள இனவெறி அரசியல் அமைப்பிற்குள்ளேயே, மீண்டும் அத்தமிழர்கள் ஒப்படைக்கப்படுவதன் மூலம் அவர்கள் வாழ்வில் நீடித்த அமைதி நிலவ முடியுமா — அத்தமிழீழ மக்களுடைய தன்னுறுதிப்பாட்டு உரிமையை மறுப்பதன் மூலம் இலங்கையில்தான் நீடித்த அமைதி நிலவ முடியுமா — என்பதே அத்தமிழீழத் தமிழர்கள் முன் எழுந்துள்ள வினாக்கள் ஆகும். உண்மையில் அத்தமிழீழத் தமிழர்கள் தமது தன் உறுதிப்பாட்டு உரிமையை மீளப் பெறுவதன் மூலமே இலங்கையில் முழுமையான அமைதியை எதிர்பார்க்க இயலும்; இந்நிலையிலேயே அத்தமிழீழத் தமிழர்கள் தொடர்ந்து தமது தன்னுறுதிப்பாட்டு உரிமைக்காகப் போராடுகிறார்கள். இவ்வாறு உருவாகும்

அனுமதியையே தமிழக மக்களாகிய நாங்களும் விரும்புகின்றோம்.

அவ்வாறு தமது அரசியல் உரிமைக்காகப் போராடும் தமிழீழத் தமிழர்களின்மீது ஒரு பொய்ம்மையான தீர்வைத் திணித்து, அவர்களைக் கருவி முனையில் தாங்களும், இலங்கையரசுத் தலைவரும் கையொப்பமிட்டுக் கொண்ட உடன்பாட்டை ஏற்றுக் கொள்ள வற்புறுத்துவதன் மூலம், இலங்கை மக்களோ தமிழீழ மக்களோ உண்மையில் அமைதியான இயல்பான வாழ்வை மேற்கொள்ள இயலுமா? முடியாது. மாறாக கருவி முனை வற்புறுத்தல்களும், வேட்டை யாடல்களும், இனப்படுகொலைகளும் அம்மக்களுடைய மனவுணர்வை இந்தியாவிற் கெதிராகவே மாற்ற வகை செய்யும். இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரான ஏதம் ஏற்படக் கூடிய நிலை உருவாகின்றது. தெற்காசியப் பகுதியில் உள்ள இந்தியாவும், இலங்கையும், தமிழீழமும் ஒன்றுக்கொன்று நட்பு நாடுகளாக இருந்து செயற்படுவதையே நாங்கள் விரும்புகின்றோம். அப்போதுதான் தெற்காசியப் பகுதி அமைதிப் பகுதியாக நிலவ முடியும். இலங்கையும் தமிழீழமும் இந்தியாவிற்கெதிரான நாடுகளாக மாறுமாயின் இந்தியாவின் பாதுகாப்பு நிலை குலைந்து ஏதமான ஒன்றாக மாறும் என்பதையும் இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

எனவே தாங்கள் தமிழீழத் தமிழர் சிக்கலுக்கு விடை காண வேண்டியது தேவை என்பதை நாங்கள் இங்கு வற்புறுத்த விரும்புகின்றோம் தமிழீழ மக்களின் சிக்கல் தொடர்பாகத் தமிழக மக்களாகிய எமது நிலைப்பாடு இதுவே. **அஃதாவது தமிழீழ மக்களின் தன்னுறுதிப்பாட்டு உரிமையுடன் கூடிய தமிழீழம் முற்று முழுதாக ஏற்கப்பட வேண்டும். தமிழீழத்தில் இயங்கும் இந்தியப் படைகள் எவ்வகைக் கட்டுப்பாடுமின்றி இந்தியாவிற்குத் திருப்பியழைக்கப்பட வேண்டும்.** இது குறித்து நாங்கள் பலமுறை தங்களிடம் வற்புறுத்தி இருக்கின்றோம் எனவே கடந்த **சனவரித் திங்களில் நாங்கள் இக்கழக வழி விடுத்த மடலில்**கூறியது போல இந்தியப்படைகள் திரும்ப அழைக்கப்பட வேண்டும் என்பதையே இங்கு வலியுறுத்த விரும்புகின்றோம்.

மேலும் தங்களது தலைமையிலுள்ள இந்திய ஒன்றியத்தின் நடுவண் அரசின் போக்கில் நாங்கள் குடி நாயக வறட்சியையே சந்தித்து வருகின்றோம். தங்களின் தலைமையானது எமது அரசியல், குடி நாயக உரிமைகளையும், வாழ்க்கை உரிமைகளையும், பறித்துக் கொடுங்கோன்மை முறையில் அழித்து வருவதாகவே செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. பல தேசிய இனங்களை ஒருங்கிணைத்து உள்ள ஒரு கூட்டமைப்பில் தாங்கள் இவ்வாறு செயற்பட்டு வருவதே எம்மை "இந்திய ஒன்றியம்'' தொடர்பாக "ஒரு முடிவைக்காண வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. அண்மைக்காலத்தில் எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட படிநிகராளிகளைக் கொண்ட எமது (மாநில) அரசு தங்களால் கலைத்தெறியப்பட்டதுடன், எம்மீது இந்திய அரசுத் தலைவரின் ஆளுமையும் திணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எமது ஆளுமை உரிமைகளைப் பறித்து விட்டு, இந்திய அரசுத் தலைவரின் ஆளுமை திணிக்கப்பட்டுள்ளதானது எம்மீது இந்திய ஒன்றிய நடுவண் அரசாக உள்ள தில்லியரசு தனது குடியேற்ற (Colonial) ஆட்சியை நிலைநாட்டியுள்ளதாகவே நாங்கள் கருதுகின்றோம். இது எமக்குள்ள அரசியல் உரிமைகள் அனைத்தையும் பறித்து அழித்தொழிக்கும் போக்காகும். ஒரு குடிநாயக அமைப்பில் கட்சி என்பது அவ்வமைப்பின் குடிநாயக மரபுகளைக் காக்கும் ஒரு கருவியாகும். ஆனால் தங்களின் தலைமையிலுள்ள பேராயக் (காங்கிரசு) கட்சியானது எமது அரசியல் உரிமைகளையும், எமது குடிநாயக உரிமைகளையும், குடி நாயக மரபுகளையும் விலை பேசுவதாகவே இருந்து வருகின்றது. இந்திய ஒன்றியத்தில் தனது கட்சி அச்ச நிலைச் செயல்களையும் (பயங்கர வாதத்தையும்) நிலைநாட்டி வருகின்றது. உமது தலைமையிலுள்ள பேராயக்கட்சியினுடைய வளர்ச்சிக்காக'வேண்டி எமது அரசியல் உரிமை பறிக்கப்பட்டதானது உமது கட்சியின் கொடும்போக்கையே வெளிக்காட்டுகிறது. இவ்வாறு தாங்களும், தங்கள் கட்சியும் செயற்படுவதைத் தமிழர்களாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். (தொடரும்)

பொருளுதவி செய்யுங்கள்!

அண்மையில், எதிர்பாராத வகையில், நம் உ. த. மு. க. இயக்க அன்பர்களில் ஓரிருவர், கழக முதல்வரின் கருத்துக்கு மாறாகவும் நம் இயக்க நடைமுறைகளுக்கு வேறாகவும், செய்த சில தேவையற்ற செயற்பாடுகளால், நம் இயக்கத்திற்கு அரசினராலும் காவல் துறையாலும், பெரிய தாக்கம் நேர்ந்துள்ளது. அதற்கென அகத்தும் புறத்தும், எச்சரிக்கையாக, இயக்க நன்மையையும் எதிர்கால நிலைப்பாட்டையும் செயற்பாட்டையும் கருதி, சில வழக்கு மன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும், எடுக்க வேண்டியும் உள்ளன. அவற்றுக்கெனப் பல்வேறு வகையில் பொருட் செலவு நேர்ந்துள்ளது; நேரவும் இருக்கிறது.

அதனை மனத்தில் கொண்டு, **தென்மொழி, தமிழ்நிலம்** அன்பர்களும், உ. த மு. க. ஆர்வலர்களும் தங்களால் இயன்ற பொருளுதவியைத் **தென்மொழி ஆசிரியர்** அவர்களின் பெயருக்கு நன்கொடையாக அனுப்பி உதவ வேண்டுகின்றேன்.

அன்பர்கள் இத் தொல்லையைப் பொறுத்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்கிறேன்.

தென்மொழி | ஆசிரியர். பெருஞ்சித்திரனார்.

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கமே, அப்பேச்சின்வழி வழி வன்னிய சாதியினர், தாங்கள் முன்கூட்டி அறிவித்த தேர்தல் புறக்கணிப்புப் போராட்டத்திற்கு முன்பாக நடுவண் அரசை எதிர்த்துப் போராட வேண்டும் எனத் தூண்டி விட்டு, அதன்பின், இன்றைக்கு ஆசிரியர் போராட்டத்தை ஒடுக்கியது போன்று அதையும் ஒடுக்கத் திட்டமிட்டு, அதன்வழி வன்னிய சாதியினரின் ஒப்போலைகளைப் பெற நினைப்பதே ஆகும். ஆக,சாணக்கிய சூழ்ச்சியில் மேலும் மேலும் தமிழர்களைப் பகுப்பதும், அதன் மூலம் வெற்றியைத் தழுவுவதுமான கொடுமையான பணிகளைச் செய்து கொண்டுள்ளார்.

இந்நிலைகளுக்கிடையில் தங்களின் ஓய்வற்ற, தாமே அனைத்து நிலைகளுக்கும் முட்டுக் கொடுத்துக் கொண்டு பணியாற்றுகிற நிலைகளை எண்ணி உள்ளம் மிகவும் நேகின்றேன். போலிகள் வாழ்கின்ற, கூலிகள் வாழ்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், தங்களின் ஆழ்ந்த எண்ணம் உறுதியாக வேர்விட்டு விரைந்து வளரும். அதற்கு இன்றைய அளவில் எங்களின் உள்ளுணர்வுகள் மிகவும் துணையாக நிற்கும். நிற்க.

நேற்றுக் கொடைக்கானல் வழக்குமன்றம் சென்று வந்தோம். 22-ஆம் பக்கல் மீண்டும் வரும்படி கூறினர். 22-ஆம் பக்கலும் கொடைக்கானலே. வழக்கறிஞர் திரு.. ...... பிணையலுக்கு முயற்சி செய்து கொண்டுள்ளார். அவர் அங்கு வழக்குமன்றத்தில் இருந்தார். தனி மூடுந்தில் இளங்கோ தவிர (அவருக்கு உடல் சரியில்லாததால் பொது மருத்துவமனை சென்றுள்ளார்.) 10 பேர் சென்றோம். முழக்கமிட்டுக் கொண்டே சிறப்பாகச் சென்று வந்தோம். மாலை $7\frac{1}{2}$ மணிக்குத் திரும்பினோம். ஓரிரு நாளில் '**தமிழ்நிலம்**' கொடுத்து விடுவதாக கூறியுள்ளனர்.

நாங்கள் இங்கு நலமுடன் உள்ளோம். தாங்கள்தாம் ஓய்வில்லாமல் பணியாற்றுவதால் உடலுக்குத் தொல்லையாகக் கட்டி வருகிறது நாங்கள் வருகின்றவரை ஒரு நல்ல உதவியாளரை வைத்துக் கொண்டு பணியாற்ற அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் சிறிதும் மனச்சோர்வு கொள்ள வேண்டாம். எங்களின் உணர்வுகள் மட்டுமன்று; எங்களின் உயிரும் தங்களின் கொள்கைகளுக்குக் துணையாக என்றும் நிற்கும்.

அன்புமகன்
பொழில்.

தமிழக விடுதலை!

இந்தியா — இலங்கைப் படைகளின் இடுக்கிப் பிடியில் சிக்கியுள்ள தமிழீழ மக்களை விடுவிக்க தமிழக விடுதலைப் போராட்டத்தை முன்னெடுங்கள்.

பறம்பை அறிவன் பக்கம்!

1. நாம் தமிழர் ஆவோம்!

அன்புள்ளங்களே,

நம் நடை நீண்ட தொலைவு நோக்கியது. நமது நோக்கங்கள், காலம் காலமாகப் போராடும் மாந்தநேய மலர்ச்சிக்கு வழிகாட்ட வல்லவை!

அதுவரை ...! நாம் நம், அண்டை வீட்டினை நேசிப்போம். நம் தமிழரை நாம் போற்றிப் பாராட்டக் கற்றுக் கொள்வோம். இதன்பொருள், தமிழரைப் பற்றிபுள்ள இழிவுகளையும் நாம் போற்ற வேண்டும் என்பதன்று. நாம் புதிய புதிய சிந்தனைகளோடு, பழைய மரபுகளையும், சிறப்புகளையும் கற்றுத் தெளிந்து மக்களை விடுவிக்கும் மாபெரும் பணியில் நாம் நம்மை இணைத்துக் கொள்வோமாக!

நாம் தமிழர் ஆவோம்- - - நாம் தமிழராக வாழ்வோம் என்பதன் பொருள், நாம் தேவர், கள்ளர், பள்ளர், பறையர், செட்டியார், முதலியார் என வாழோம் என்பதாம்! புதுமை பழமை என்பது, இன்றுள்ள கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதால் தெளிந்து தேறக் கூடியன எனலாம்.

2. அன்னை நிலத்தை மீட்க.

அன்னை நிலத்தை மீட்கத் — தமிழா
ஆர்ப்புற வேண்டுமடா.
விண்ணில் எதிரிகள் சூழ்ந்தே — தமிழா
விழ்த்த நினைத்தாலும், (அன்னை)

எரிதழல் குண்டுகள் ஏந்தித் — தமிழா
எதிர்க்க வருவார்கள் !
உரிமையின் மேலோ உயிரெனத் — தமிழா
போரிட முனைவாயே.

காட்டிலும் மேட்டிலும் விரட்டித் — தமிழா
வேட்டை யாடிடவே
கூடிவரும் பகையை எதிர்க்கத் — தமிழா
குன்றென நிற்பாயே!

தமிழின விடுதலை மண்ணைத் — தமிழா
விழிப்புறச் செய்புமடா.
பிறமக்கள் வாழ்வினில் உண்டு — தமிழா
உனதின மேன்மையுமே!

உலகினில் பாட்டாளி என்பான் — தமிழா
உன்பெயர் ஊட்டமடா!
எதிரிகள் தமிழரெனச் சுரண்டின் — தமிழா
எற்றி நொறுக்கிடடா.
வையத் தலைமையைத் தமிழா — தமிழா
எய்திடப் பாடுபடு!

-- தரங்கை பன்னீர்ச் செல்வன்.

கரவா நெஞ்சக் கரந்தடி மறவரின்
காலடிப் புழுதியைத் தொழுகின்றேன் — தம்பி
பிரபா கரனின் பெரும்புலிப் படையில்
பிணைந்திட விழைந்தே எழுகின்றேன்!

முப்ப திலக்க முதுதமி ழீழர்
முழுவிடு தலையைக் காண்கின்றேன் — சிங்களச்
செப்பிடு கலையைச், சிறியரின் திமிரைச்
செகுத்திட உறுதி பூண்கின்றேன்!

உயிரை விலையாய்த் தருமுன் பகையை
ஒழித்திடக் கருவியைத் தூக்குகின்றேன்—தமிழப்
பயிரைக் காத்துப் பைதிரம் மீட்கும்
பாசறைப் புலிகளை ஊக்குகின்றேன்!

முழுத்திறன் காட்டிக் கொடும்பகை வெல்ல
முந்தும் படையுள் நீந்துகின்றேன் — என்றன்
கழுத்தினில் நஞ்சைக் கட்டிக் கொண்டே
கையில் படைக்கலன் ஏந்துகின்றேன்!

படுகொலை வஞ்சகப் பகைவரைக் கரந்தடிப்
படைநெறிப் போரிலே வென்றிடுவேன் — ஈழ
விடுதலை விடுதலை விடுதலை என்னும்
வெறியொடு கடுகியே செல்கின்றேன்!

கொக்கரிக் கின்ற கூலிப் படையைக்
கொசுக்களைப் போல நசுக்கிடுவேன் — தமிழ
மக்களின் எழுச்சியை மதியாக் கயவரை
மன்பதை வியக்கப் பொசுக்கிடுவேன்!

இன்னும் ஒதுங்கி இருந்திட லாமோ
எழுந்து வாரீர் என்னோடு — நமக்கு
முன்னர்ப் பல்லோர் சிந்திய குருதியில்
முளைத்திடும் ஈழப் பொன்னாடு!

காமராசு பற்றித் தேசாய்!

1981-ஆம் ஆண்டு தேசாய் மதுரை வந்திருந்த பொழுது, அவரிடம், தலைவர் காமராசரின் அரசியல் பணிகளையும் அப்பொழுதைய அரசியல் சூழ்நிலைகளையும் ஒட்டிச் செய்தியாளர்கள் பல்வேறு வினாக்களைத் தொடுத்ததாகவும், அதற்குத் தேசாய் சினந்து, "காமராசர் என்ன பெரிய அரசியல் அறிஞரா? அவரைப் பற்றி இவ்வளவு நேரம் கேட்டு என்நேரத்தை ஏன் வீணாக்குகிறீர்கள்?" என்றாராம்.

அக்கால் வெளியே வந்த செய்தியாளர்களிடம் அப்பொழுதைய தமிழ்நாடு சனதா கட்சித் தலைவர் முகமது இசுமாயில் அவர்களும், மாநிலங்கள் அவை உறுப்பினர் இரா. செழியன் அவர்களும், 'தலைவர் காமராசு பற்றித் தேசாய் கூறிய கருத்துகளை வெளியிட்டு விடாதீர்கள்' என்று மிகவும் பணிந்து கேட்டுக் கொண்டனராம். அதற்கிணங்க, செய்தியாளர்கள் அச் செய்தியை வெளியிட வில்லையாம். ('நாடு' செய்தியிதழ் 21-8-1981)

தலைவர் காமராசர் பற்றி மட்டுமன்று, தென்னகத் தலைவர் யாரையும் வடநாட்டுத் தலைவர்கள் தங்கள் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வார்களே யன்றி, அவர்களை எப்பொழுதுமே ஒரு பொருட்டாக மதித்ததில்லை; மதிப்பதுமில்லை. 0

TN/MS (C) 657

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண் - 111

நூல் அஞ்சல்

பெறுநர்:
திரு. / திருவாட்டி

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்!

தனி இதழ் விலை	உரு: 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

இந்தியாவுக்கு - 29

இந்தியாவின் ஒற்றுமைக்குப் ... இனத்தை உட்படுக்கும் சாதி, மதம், கட்சி போன்ற பிரிவுகளே அதன் ஒற்றுமைக்கும் முதல் எதிரிகள்!

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.